FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301673

1. District : மாவட்டம் Salem PS: காவல்நிலையம் V4 AC Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 14/AC/2026 Date: நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 10.09.2026 at 13.45hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 2) 23.09.2026 at 10.10hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.09.2026 Time : நேரம் 18.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.09.2026 Time : நேரம் 20.00hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: East, 3.5Kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Surveyor, Ammapet Zone, Salem
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Kathiravan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Shanmugam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Acting Driver (g) Address : முகவரி 75-A/162, Pennadam Venkatachalam St, Near Singamethai, Ammapet main road, Salem town.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Murugesan, Surveyor, Ammapet Zone, Salem

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. கதிரவன்
24.9.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24.09.2026 at 21.05hrs

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.09.2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R.D. Ravikumar
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
VPHC, Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 24.09.2026-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை சுமார் 18.00 மணிக்கு சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.D ரவிக்குமார் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.S. கதிரவன், த/பெ S.சண்முகம், கதவு எண். 75-A/162, பென்னடம் வெங்கட்ராமன் தெரு, சிங்கமெத்தை அருகில், அம்மாபேட்டை மெயின் ரோடு, சேலம் டவுன். என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்: திரு.S. கதிரவன், த/பெ S.சண்முகம், கதவு எண். 75-A/162, பென்னடம் வெங்கட்ராமன் தெரு, சிங்கமெத்தை அருகில், அம்மாபேட்டை மெயின் ரோடு, சேலம் டவுன். பெறுநர்: காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் எனது குடும்பத்துடன் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆக்டிங் ட்ரைவராக வேலை செய்து வருகிறேன். எனது தந்தை சண்முகம் அவர்களுக்கு சொந்தமாக சேலம் டவுனில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. அந்த வீட்டை எனது அப்பா கடந்த 2006 ம் வருடம் எனக்கும் எனது தம்பி இளங்கோவன் பெயருக்கும் இரண்டாக பிரித்து உயில் எழுதி வைத்திருந்தார். எனது அப்பா கடந்த 27.05.2008 தேதி இறந்துவிட்டார். அந்த உயில் படி எனக்கு 279.சதுரடி கொண்ட வீட்டின் ஒரு பகுதி பாத்தியப்பட்டது. அதை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து, தனிப்பட்டா பெறுவதற்கு கடந்த 01.09.2026-ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அதற்கான மனு எண் 2026/0154/08/008974 ஆகும். அதன் பின்னர் 09.09.2026 அன்று காலை சுமார் 08.30 மணிக்கு பூவரசன் என்பவர் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு தான் அம்மாபேட்டை சர்வேயர் முருகேசன் அவர்களின் உதவியாளர் என்று அறிமுகம் செய்து கொண்டு நீங்கள் தான் கதிரவனா நீங்கள் ஆன்லைன்னில் தனி பட்டா வேண்டி ஏதேனும் விண்ணப்பம் செய்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் என்று கூறினேன். அதற்கு அவர் நாளை காலை அலுவலகத்திற்கு நேரில் வாங்க என்று கூறினார். அதன்படி, நான் 10.09.2026-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு அம்மாபேட்டை கார்ப்ரேசன் அலுவலக வளாகத்தில் உள்ள சர்வேயர் அலுவலத்திற்கு சென்றேன். அங்கிருந்த பூவரசன் அவர்கள் என்னிடம், இன்று சர்வேயர் உங்கள் வீட்டை அளக்க வருகிறார் நீங்கள்

வீட்டில் இருங்க என்று கூறி அனுப்பிவிட்டார். அதன்படி அன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு சர்வேயர் முருகேசன், பூவரசன் மற்றும் மேலும் ஒரு நபருடன் எனது வீட்டிற்கு வந்து வீட்டை அளந்தார்கள். அதன் பின்னர் மதியம் சுமார் 01.45 மணிக்கு அவர்கள் கிளம்பும் போது சர்வேயர் முருகேசன் என்னுடைய அசல் உயில் பத்திரத்தை கேட்டு வாங்கிகொண்டு, எதற்காக தனி பட்டா வேண்டி விண்ணப்பம் செய்தீர்கள் என்று கேட்டார். நான் அதற்கு முதலமைச்சரின் வெற்றி வீடு திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வதற்காக தனி பட்டா தேவைப்படுகிறது, அதனால் தனி பட்டா வேண்டி விண்ணப்பம் செய்ததாக கூறினேன். அப்போது சர்வேயர் முருகேசன் என்னை தனியாக என் வீட்டுக்கு முன்பு அழைத்து ரூபாய் 7000 எனக்கு கொடுத்துவிடுங்கள் உங்களுக்கு உடனே பட்டா வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்றும் பட்டா தயார் செய்த பின்பு அதனை கிராம கணக்குகளில் பதிவு செய்த பின்னர் தனி பட்டா மற்றும் என்னுடைய அசல் உயில் பத்திரத்தையும் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். அதற்கு நான், தற்போது என்னால் அவ்வளவு பணம் உடனே ஏற்பாடு செய்ய முடியாது என்றும் அலுவலகத்திற்கு வந்து பார்ப்பதாக கூறிவிட்டேன். அதன் பின்னர் நான் சர்வேயர் முருகேசன் அவர்களை நேரில் சந்தித்து என்னுடைய தனி பட்டா பற்றி விசாரிக்க அவருடைய அலுவலகத்திற்கு சென்ற போதெல்லாம் அவருடைய அலுவலகமானது பூட்டி இருந்ததால் அவரை பார்க்கமுடியவில்லை. கடந்த 14.09.2026-ம் தேதி பூவரசன் அவர்களை எதேச்சையாக வழியில் பார்த்த போது, நான் அவரிடம் சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று வந்த விபரம் சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் விண்ணப்பித்திருந்த விண்ணப்பத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.600/-ஐ கட்டுமாறும், பொதுவாக காலை 10.00 மணி சுமாருக்கு அலுவலத்திற்கு வந்தால் சர்வேயரை பார்க்கலாம் என்றும், அதன் பின்னர் நாங்கள் நிலம் அளக்க சென்று விடுவோம் என்றும் கூறினார். பூவரசன் சொன்னப்படி அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை அடுத்த நாள் 15.09.2026 அன்று காலை சுமார் 10.15 மணிக்கு சர்வேயரின் அலுவலகத்துக்கு சென்று அங்கு இருந்த கம்ப்யூட்டரில் ஆன்லைன் மூலம் ரூ.600 ஐ கட்டினேன். அப்போது சர்வேயர் முருகேசன் மற்றும் பூவரசன் ஆகியோர் அலுவலகத்தில் இல்லை. அதன் பின்னர் 23.09.2026-ம் தேதி காலை சுமார் 10.10 மணிக்கு நான் சர்வேயரின் அலுவலகத்துக்கு சென்று பார்த்தேன். அப்போது சர்வேயர் முருகேசன் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் நான் கட்டணம் ரூ.600 செலுத்தியதற்கான ரசீதை காண்பித்து என்னுடைய தனி பட்டா பற்றி கேட்ட போது, அவர் எனக்கு பட்டா வழங்க தாசில்தாரிடமிருந்து உத்தரவு வந்து

விட்டதாகவும், அதனை அலுவலகத்தில் உள்ள ஆவணத்தில் பதிவு செய்து, அதன் பின்னர் தான் பட்டாவை வழங்க முடியும் என்று கூறினார். மேலும் அவர் என்னிடம் தான் கேட்ட ரூ-7000 ரெடியா என்று கேட்டார். அதற்கு நான் சார் என்னால் ரூ-7000 ரெடி செய்ய முடியவில்லை அதனால் கொஞ்சம் குறச்சு சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி உங்களுக்காக ரூ.2000 குறைத்துக் கொண்டு ரூ-5000 கொடுத்து விடுங்கள், நான் உடனே உங்களுடைய பட்டா விபரத்தை அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் பதிவு செய்துவிட்டு, பாட்டாவையும், உங்களது அசல் உயிலையும் கொடுத்து விடுக்கிறேன் என கண்டிப்பாக கூறினார். நான் சரி சார் பணத்தை ஏற்பாடு செய்து விட்டு உங்களை வந்து பார்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தை, என்னிடம் வேலை செய்யும் பூவரசன் என்பவரிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். தற்போது நான் சர்வேயர் முருகேசன் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5000 தை ஏற்பாடு செய்து வைத்துள்ளேன். ஆனால் எனக்கு லஞ்சம் கொடுத்து தனி பட்டா பெறுவதற்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.5000 கேட்ட சர்வேயர் முருகேசன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு

(ஒப்பம்/-XXXXXX S.கதிரவன் 24/09/26)

Sir, Received the computer-typed complaint on 24.09.2026 at 18.00 hrs, Sd XXXX (R.D.RAVIKUMAR) 24.09.2026, Inspector of Police, V&AC, Salem.

Sir, the genuineness of the informant was verified through sources, and nothing came to adverse and the integrity and antecedents of the accused also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from DVAC and registered a case in Salem V&AC Cr. No.14/AC/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, today, 24.09.2026 at 20.00 hrs. Sd XXXX (R.D.RAVIKUMAR) 24.09.2026, Inspector of Police, V&AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble Special District Judge, Special district court for Trial of Cases under the Prevention of Corruption Act, Salem and the remaining copies were sent to the officers concerned.

24.09.2026

(R.D.RAVIKUMAR)
Inspector of Police,
Vigilance and Anti–Corruption,
Salem.